1. சர்வோதய சங்கங்களுக்கு வழங்கப்படும் தள்ளுபடி மானியத் தொகை ரூ.10.00 கோடியிலிருந்து ரூ.15.00 கோடியாக உயர்த்தி வழங்குதல்.

சர்வோதய சங்கங்களில் உற்பத்தியில் ஈடுபடும் நூற்போர், நெய்வோர், முறுக்கேற்றுபவர், சாயமிடுபவர் ஆகியோர் மேலும் பயன்பெறும் வகையில் சர்வோதய சங்கங்களுக்கு கதர் உற்பத்தியின் மீது வழங்கப்படும் தள்ளுபடி மானிய உச்ச வரம்பு ரூ.10 கோடியினை 2014–2015 ஆண்டிலிருந்து ரூ.15கோடியாக உயர்த்தி வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

**2. திருச்சிராப்பள்ளி சமயபுரத்தில் குளியல் சோப்பு தயாரிக்கும் தானியங்கி இயந்திரம் நிறுவுதல்.**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் திருச்சிராப்பள்ளி சமயபுரத்தில் குளியல் சோப்பு அலகு இயங்கி வருகிறது. பல்வேறு வகையான தரமான நறுமண குளியல் சோப்புகளை மிக அதிக அளவில் உற்பத்தி மற்றும் விற்பனை செய்ய, அவ்வலகில் புதிய கட்டிடம் கட்டி தானியங்கி குளியல் சோப்பு இயந்திரம் நிறுவிட ரூபாய் **2.50** கோடி வழங்கிட **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**3. வேலூர் மாவட்டம் பள்ளிகொண்டா தச்சு மற்றும் கொல்லு அலகினை நவீனப்படுத்துதல்.**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் தச்சு மற்றும் கொல்லு அலகு வேலூர் மாவட்டம் பள்ளிகொண்டாவில் இயங்கி வருகிறது. இவ்வலகின் உற்பத்தியை பன்மடங்கு பெருக்கி, உற்பத்தி செலவினைக் குறைத்து, இலாபகரமாக இயக்கிட புதிய கட்டிடம் மற்றும் நவீன இயந்திரங்கள் ரூபாய் **65** இலட்சத்தில் நிறுவிட **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**4. அம்பத்தூர் காலணி அலகில் கண்கவர் காலணி தயாரித்தல்.**

அம்பத்தூர் காலணி அலகின் உற்பத்தி திறனை மேம்படுத்தி தொழிலாளர்கள் அதிக வேலைவாய்ப்பினைப் பெறவும், நல்ல தரமான காலணிகள் மற்றும் தோல் பொருட்கள் அதிக அளவில் உற்பத்தி செய்து, குறைந்த விலையில் விற்பனை செய்திட, நவீன இயந்திரங்கள் ரூபாய் 1.50 கோடி செலவில் நிறுவிட **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**5. வாரியத்தின் தொழிற் கூட்டுறவு சங்கங்களை புனரமைத்திட நிதியுதவி வழங்குதல்.**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் செயல்படும் தொழில் கூட்டுறவு சங்கங்கள் உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டு வருகின்றன. இத்தொழிற் கூட்டுறவு சங்கங்களின் வியாபார வளர்ச்சிக்கும், அவற்றை புனரமைத்திடவும் **6** தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு தலா ரூபாய் **5** இலட்சம் வீதம் ரூபாய் **30** இலட்சம் வழங்கிட **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**6. கதர் வாரிய நெசவாளர்களின் நெசவு உபகரணங்களை புதுப்பித்தல்.**

பாரம்பரியமிக்க நெசவுத் தொழிலில் அச்சு, விழுது, ஜக்கார்டு மற்றும நாடா ஆகியவை மிகவும் அவசியமான உபகரணங்கள் ஆகும். நெசவு உற்பத்தியை அதிகத்து, நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட ரூபாய் 30 இலட்சம் மதிப்பில் அச்சு, விழுது, ஜக்கார்டு, நாடா, தார் சுற்றும் இயந்திரம் போன்ற உபகரணங்களை நெசவாளர்களுக்கு வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

7. விருத்தாச்சலம் பீங்கான் கலைக்கூடம் புனரமைத்தல்.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் பீங்கான் உற்பத்தி அலகு கடலூர் மாவட்டம் விருத்தாச்சலத்தில் செயல்பட்டு வருகிறது. கடலூர் மாவட்ட மட்பாண்ட தொழிலாளர்களின் வாழ்வதாரத்தை மேம்படுத்தவும், உற்பத்தி அதிகரிக்கவும், விருத்தாச்சலத்தில் செயல்படும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பீங்கான் கலைக்கூடத்தில், புதிய சூளை ரூபாய் 25 இலட்சத்தில் நிறுவிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.